
ஸ்ரீ குருப்யோ நமஹ :

ஸ்ரீ ஞானானந்த நித்ய சேவா டிரஸ்ட், தபோவனம்.

# ஸ்ரீ நித்யானந்தகிரி ஸ்வாமிகளின்
# மூன்றாமாண்டு ஆராதனை விழா



**ப்ரஸன்னவதனாம்போஜம் கருணாம்ருதஸாகரம்**
**குருவாப்தயோகிஸம்ஞகம் நித்யானந்தகிரிம் பஜே ||1||**

**அபாரகருணாஸிந்தும் ஸதா மதுரவாசிநம்**
**ஸர்வஸாஸ்த்ரோபதேஷ்டாரம் மாத்ருவத் ஶிஷ்யபாலினம்**
**ஸம்ஸாரஸாகரோத்தாரம் நிர்மலாத்வைதரூபிணம்**
**ஆத்மசிந்தாப்ரவக்தாரம் நித்யானந்தகிரிம் பஜே ||2||**

**ஞானானந்தஸ்தலீவாஸம் பக்தஸாம்ராஜ்யஸத்பதம்**
**ஸித்தப்ரணவமூர்திம் தம் நித்யானந்தகிரிம் பஜே ||3||**

க்ரியதே நாராயணஸ்ம்ருதி :!

நமது பாரம்பரியத்தின்படி, பூஜ்யஸ்ரீ நித்யானந்த கிரி ஸ்வாமிகளின் மூன்றாவது வருடாந்திர ஆராதனை, நிகழும் பராபவ வருடம் சித்திரைமீ கிருஷ்ண பக்ஷம், தசமி திதி, மே 11, 2026, திங்கள்கிழமை அன்று நடைபெறவிருக்கிறது. ஆராதனை உற்சவம் மே 6, 2026 அன்று காலை கணபதி ஹோமத்துடன் தொடங்கி, தொடர்ந்து பாகவத பாராயணம், கிருஷ்ண யஜுர் வேத பாராயணம், ஏகாதசருத்ர பாராயணத்துடன் ஸ்ரீருத்ர ஹோமம், தேவி மாஹாத்ம்யம், மகாபிஷேகம், அன்னதானம் முதலியன நடைபெற உள்ளது. இறுதியில் ஆராதனை அன்று தீர்த்த நாராயண பூஜையுடன் விழா நிறைவேறி மஹாபிரசாதம் வழங்கப்படும்.

இந்த புனிதமான பெருவிழாவில் பக்தர்கள் அனைவரும் வந்து கலந்துகொண்டு நமது ஸ்வாமிகளின் அனுக்கிரகத்தை பூரணமாக அடைவீராக!

இப்படிக்கு

**அறங்காவலர்கள்**

**ஸ்ரீ ஞானானந்த நித்ய சேவா டிரஸ்ட்,**

# ஸ்வாமி நித்யானந்த கிரி

ஸத்குரு ஸ்ரீ ஞானானந்த கிரி ஸ்வாமிகள் தபோவனத்தில் அரசாட்சி புரிந்த காலத்தில் அவரிடம் பூர்ண சரணாகதி அடைந்தவர்களில் ஸ்வாமி நித்யானந்த கிரி மிக முக்கியமானவர். 1971ல் தைப்பூசத்தன்று ஸத்குரு ஸ்ரீ ஞானானந்த கிரி ஸ்வாமிகளிடம் முழுவதுமாக சரணடைந்தார். இவர் தபோவனம் வந்த அன்றே ஸத்குருநாதர் அவருக்கு நிர்வாண தீக்ஷை கொடுத்து 'யோகி' என்று அழைத்தார். அப்போதிலிருந்தே தபோவனத்தில் அனைத்து பக்தர்களும் அவரை யோகி ஸ்வாமிகள்' என்று அழைத்தார்கள்.

ஸத்குருநாதர் தமது இறுதி காலத்தில் தமது உபதேசங்களை தொகுக்கும் முக்கிய பணியினை இவரிடம் ஒப்படைத்தார். ஸத்குருநாதர் ஸமாதிக்கு முன் இப்பணியை முழுவதும் பார்த்து, ஒப்புதல் அளித்திருந்தாலும் அவரது ஸமாதிக்கு பிறகு 1974 சித்ரா பௌர்ணமி அன்று 'ஞான இன்ப வெளி' என்ற பெயரில் இத்தொகுப்பு வெளியானது. ஸத்குருநாதரின் மகாஸமாதி வரையில் ஸ்வாமிகள் அவருடன் இருந்து சேவை செய்தார். ஸ்வாமி வித்யானந்த கிரியிடம் 12.6.1975-ல் ஸந்நியாஸ தீக்ஷை பெற்று 'நித்யானந்த கிரி' என்று தீக்ஷா நாமம் பெற்றார். பிறகு ஸத்குருநாதர் ஆசியினால் தபோவனத்தில் அருளாலய பூஜாகிரமங்கள், ஆராதனை முறைகள், ஞானபுரி திட்டம், ஸந்நியாஸிகளின் ஸமாதி, அதற்குரிய ஸமாதி கட்டிடம் மற்றும் அங்கு செய்யவேண்டிய பூஜாவிதானங்களை அமைக்க முன்னின்று உதவினார்.

நிவர்த்திமார்க்கத்தை அடைய விரும்பும் பக்தர்களுக்கு ஸத்குருவால் உபதேசிக்கப்பட்ட பிரம்மவித்தை மற்றும் ஆத்மவிசார பரம்பரையை நன்கு பேணிகாத்து, விருத்தி அடைய செய்வதற்காக 1986 ஆம் ஆண்டு சித்ராபௌர்ணமியன்று 'ஸ்ரீ ஞானானந்த நிகேதன்' என்ற அறக்கட்டளையை ஸ்வாமி வித்யானந்த கிரி மற்றும் ஸத்குருநாதரின் சில முக்கிய பக்தர்கள் உதவியுடன் நிறுவினார். ஸத்குருநாதர் ஆசியால் பல ஸந்நியாசிகளும் ஆன்மிக விசாரம் செய்ய விரும்பும் அன்பர்களும் நமது ஸ்வாமிகளிடம் வேதாந்தகிரந்தங்களை ஸ்ரவணம் செய்தனர். ஸ்வாமிகள் விருப்பபட்டது போல் இன்றும் பல மாணாக்கர்களுக்கு தினமும் வேதாந்த பாடம் நடைபெறுகிறது. ஸ்வாமி நித்யானந்த கிரி பலவருடங்கள் வெளி நாடுகளுக்கு சென்று தமது குருவை பற்றியும் அவரது உபதேசங்களையும் எடுத்து உரைத்துள்ளார். அதனால் மேற்கத்திய நாட்டிலிருந்து அன்பர்கள் இன்றளவும் நிகேதனுக்கு வந்து தங்கி வேதாந்த பாடம் பயின்று வருகிறார்கள். மேலும் ஸ்வாமிகள் பழமையான வேதாந்த கிரந்தங்களையும் வேதாந்த மற்றும் குருபக்தி பாடல்களையும் CD மூலமாக வெளியிட்டார்.

ஸ்வாமிகள் 15-04-2023 அன்று மாலை 3.25 மணியளவில் பரிபூர்ண நிலை அடைந்தார். அவர் முன்பே கூறியிருந்த இடத்தில் அவரது ஸமாதி அமைக்கப்பட்டது. 26.01.2025 அன்று ஸ்வாமிகளின் அதிஷ்டானத்திற்கு வைதீக முறைப்படி ப்ரதிஷ்டாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்று அதைத் தொடர்ந்து தினசரி வைதீக முறைப்படி பூஜைகள் நடைபெற்று வருகிறது.

தமது எல்லையற்ற அன்பு மற்றும் கருணையுடன், ஸ்வாமிகள் ஒவ்வொரு பக்தர்களுக்கும் தனித்தனியாக அவரவர் ஆன்மீக விருத்திக்கேற்ப வழி காட்டி, அவர்களது ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவினார். அவரது அரவணைப்பு ஆன்மீக ஸாதகர்களை ஞானம் மற்றும் உள் அமைதியை நோக்கி வழிநடத்தியது. அவரது ஆராதனையில் கலந்து கொள்வது நாம் அவருக்கு நமது பக்தியை வெளிப்படுத்தவும், அவருடைய தெய்வீக ஸான்னித்தியத்தை உணர்வதோடு நம் இதயங்களிலும் உயிருடன் வைத்திருப்பதற்கான நல்வாய்ப்பாகவும் அமைகிறது.

1. பூஜைகளில் பங்கேற்க விரும்புவோர் கீழ்கண்ட வங்கி கணக்கில் கட்டணத்தை செலுத்தி தங்கள் பெயர், நக்ஷத்திரம் விவரங்களை தெரிவிக்குமாறு வேண்டி கொள்கிறோம்.

| வரிசை எண் | நிகழ்ச்சி | தொகை |
|---|---|---|
| 1 | கணபதி ஹோமம் | Rs.500 |
| 2 | பாகவத பாராயணம் | Rs.1000 |
| 3 | வேத பாராயணம் | Rs.2000 |
| 4 | ருத்ர பாராயணம் & ஹோமம் | Rs.2000 |
| 5 | ஆராதனை அன்று மஹாபிஷேகம் | Rs.500 |

Sri Gnanananda Nitya Seva Trust,

Equitas Bank Chennai

SB A/c no. : 100053773221

IFSC Code : ESFB0001001

eqt2406122424@equitas

2. அன்னதானத்தில் பங்கேற்க விரும்புவோர் தங்களால் இயன்ற நன்கொடையினை கீழே உள்ள வங்கி கணக்குக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இதற்க்கு 80 (G) விலக்கு உண்டு. பக்தர்கள் தங்கள் பெயர், விலாசம் மற்றும் PAN விவரங்களை அளிக்க வேண்டுகிறோம்.

Sri Gnanananda Niketan

State Bank of India Tirukoilur

SB A/c no.: 11221958154

IFSC Code: SBIN0000992

UPI ID : 9486629866@sbi

3. வெளி நாட்டிலிருந்து பணம் அனுப்ப விரும்பும் பக்தர்கள், பின் கண்ட தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேற்கண்ட வங்கி கணக்குகளுக்கு பணம் அனுப்ப வேண்டாம் என தெரிவித்து கொள்கிறோம்.

# ஸ்ரீ ஞானானந்த நித்ய சேவா டிரஸ்ட்

## ஸ்வாமி நித்யானந்தகிரியின் மூன்றாம் வருட ஆராதனை விழா

## மே 6 முதல் மே 11 வரை

| தேதி | நிகழ்ச்சி | நேரம் |
|---|---|---|
| 06.05.2026 | கணபதி ஹோமம் | 7:00 am |
| | பாகவத பாராயணம் ( ஆனந்த குடிர் ) | 8:00 am - 12:00 noon<br>3:00 am - 6:00 pm |
| 07.05.2026 to 09.05.2026 | பாகவத பாராயணம் ( ஆனந்த குடிர் ) | 8:00 am - 12:00 noon<br>3:00 am - 6:00 pm |
| | கிருஷ்ண யஜுர்வேத பாராயணம் ( ஸத்ஸங்க மண்டபம் ) | 8:00 am - 12:00 noon<br>3:00 am - 7:00 pm |
| 10.05.2026 | பாகவத பாராயணம் (ஆனந்த குடிர்) | 8:00 am - 12:00 noon<br>3:00 am - 6:00 pm |
| | கிருஷ்ண யஜுர்வேத பாராயணம் ( ஸத்ஸங்க மண்டபம் ) | 8:00 am - 12:00 noon<br>3:00 am - 7:00 pm |
| | ஏகாதஸருத்ர பாராயணத்துடன் ஸ்ரீருத்ர ஹோமம் ( ப்ருந்தாவனம் ) | 4:30 pm |
| | தேவி மாஹாத்ம்யம் (ஆனந்த குடிர்) | 3:00 pm |
| 11.05.2026 | மஹா அபிஷேகம் ( ப்ருந்தாவனம் ) | 7:00 am |
| | தீர்த்த நாராயண பூஜை ( ஸத்ஸங்க மண்டபம் ) | 11:30 am |
| | அன்னதானம் | 12:30 pm |

**For Accomodation etc please contact**

1. Sri R.Sivakumar - Mob No. 9486629866, Email ID. niketanmanager@gmail.com
2. Sri V.Parameswaran - Mob No. 9444109401, Email ID. Sgnityasevatrust@gmail.com
3. Swamini Prabhavananda Saraswati - Email ID. praphavanandasaraswati@gmail.com

ஸ்ரீதரன் கார்ட்ஸ் & பிரிண்டர்ஸ், பள்ளிவாசல் தெரு, திருக்கோவிலூர் 98422 75762.